இது ஜனநாயகத்துக்கு அழகல்ல!

‘ஆனந்த விகடன்’ தலையங்கம்!

‘‘பத்திரிகை நிறுவனங்கள் மற்றும் மீடியா குழுமங்கள் புதிதாகப் பதிவுசெய்து பத்திரிகைகளைத் தொடங்குவதை எளிதாக்குகிறோம். பிரிட்டிஷ் காலத்து தண்டனைப் பிரிவுகள் பலவற்றை நீக்குகிறோம்.” சமீபத்தில் நாடாளுமன்றத்தில்அறிமுகம் செய்யப்பட்ட பத்திரிகை மற்றும் காலமுறை இதழ்கள் பதிவு மசோதா குறித்து மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சர் அனுராக் தாக்குர் இப்படிக் கூறினார். பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் சுதந்திர எழுச்சியை அடக்குவதற்காக 1867-ம் ஆண்டு பத்திரிகைப் பதிவுச் சட்டம் கொண்டு வரப்பட்டது. “இந்தச் சட்டத்தை எளிமையாக்குகிறேன்” என்று இதைவிடக் கொடுமை யான விதிகளுடன் மத்திய அரசு கொண்டு வந்திருக்கும் புதிய மசோதா, பத்திரிகைச் சுதந்திரத்தை மிக மோசமாக நசுக்கும் அபாயகரமான விதிகளைக் கொண்டுள்ளது.

செய்தித்தாள்கள் பதிவாளர் என்பவர் இதுவரை ஒரு செய்தித்தாள் அல்லது பருவ இதழைப் பதிவு செய்து நடத்தும் உரிமையை அளிக்கும் அலுவலராக மட்டுமே இருந்தார். புதிய மசோதா இவருக்கு ஒழுங்குபடுத்தும் அதிகாரத்தையும் கொடுக்கிறது. இதன்படி பதிவாளரோ, குறிப்பிட்ட அதிகாரம் உள்ள வரோ, ஒரு செய்தித்தாள் நிறுவனத்துக் குள் நுழைந்து சோதனையிட முடியும். ‘குறிப்பிட்ட அதிகாரம் உள்ளவர்’ என்று குழப்பமாகக் குறிப்பிடுவதால், காவல் துறை உள்ளிட்ட எவருக்கும் இந்த அதிகாரத்தை எதிர்காலத்தில் கொடுத்துவிட முடியும். இதேபோல, இந்த மசோதாவின் பிரிவு 19, இந்தியாவில் செய்தி வெளியீடு தொடர்பான விதிகள் மற்றும் வழிகாட்டு நெறிகளைக் கொண்டுவரும் அதிகாரத்தை மத்திய அரசுக்கு வழங்குகிறது. ‘அரசுக்கு எதிராக நியாயமான விமர்சனங்களை வைக்கும் பத்திரிகைகளைக் கட்டுப்படுத்த இந்த மசோதா பயன்படுத்தப்படும். பத்திரிகைச்சுதந்திரத்தில் அரசின் தலையீட்டை அதிகரிக்கும் செயல் இது’ என்று பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம் கடுமையாகக் கண்டித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட தனிநபர் தகவல் பாதுகாப்பு மசோதாவிலும், பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிக்கும் பல அம்சங்கள் உள்ளன. இந்த மசோதாவின் பிரிவு 36-ன் படி, எவரிடமிருந்தும் தனிநபர் தகவல்களைக் கேட்டுப் பெறும் உரிமை அரசுக்குத் தரப்படுகிறது. பத்திரிகையாளர்களிடம், அவர்களுக்குத் தகவல் கொடுத்தது யார் என்றும் கேட்க முடியும். 37(1) (பி) பிரிவின்படி, ‘பொதுநலனுக்காக’ என்று சொல்லி எந்தச் செய்தியையும் அரசு தணிக்கை செய்ய முடியும். ‘எது பொதுநலன்’ என்று வரையறுக்கப்படாததால், எந்த விமர்சனத்தையும்‘பொதுநலன் கருதி அரசு தணிக்கை செய்யக்கூடும்.

ஜனநாயகத்தின் நான்காம் தூணான பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிக்கும் செயலை மத்திய அரசு தொடர்ச்சியாகச் செய்துவருகிறது. இந்த இரண்டு மசோதாக்கள் மட்டுமன்றி, ஏற்கெனவே கடந்த ஏப்ரலில் மத்திய அரசு அமல்படுத்திய தகவல் தொழில்நுட்பத் திருத்த விதிகள் 2023-ம் இதே போன்ற மோசமான அம்சங்களைக் கொண்டிருந்தது. டிஜிட்டல் மீடியாக்களில் வெளியாகும் செய்திகளில் எதையும், “இது தவறான அர்த்தம் கொடுக்கும் செய்தி” என்று முடிவு செய்து, அதை நீக்கும் அதிகாரத்தை மத்திய அரசு அமைக்கும் Fact Check Unit-களுக்கு வழங்குகிறது அந்த விதி. இந்த அமைப்புகளில் யார் இருப்பார்கள் என்றும் தெளிவாகச் சொல்லவில்லை. வரைமுறையற்ற இந்தத் தணிக்கையை எதிர்த்து பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம்மும்பைஉயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்ததைத் தொடர்ந்து, அந்த விதிகளை அமல்படுத்தத் தடை விதிக்கப்பட்டது.

ஆக்கபூர்வமான விமர்சனங்களை எதிர்கொள்வது அரசின் கடமை. விமர்சனம் செய்பவர்களின் குரல்வளையை நெரிப்பது ஜனநாயகத்துக்கு அழகல்ல!

நன்றி:
‘ஆனந்த விகடன்’
16.08.2023

மணிப்பூர் குறித்து பேசாத மோடி!

மக்களவையில் எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு!

புதுடெல்லி,ஆக.11- மக்களவையில் பேசி வரும் பிரதமர் மோடி மணிப்பூர் குறித்து பேசாததைக் கண்டித்து எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்தன.

மக்களவையில் மத்திய அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீது மக்களவையில் மூன்றாவது நாளாக நேற்று நேற்று (வியாழக்கிழமை) விவாதம் நடைபெற்றது.

தொடர்ந்து நேற்று மாலை 5 மணியளவில் பிரதமர் நரேந்திர மோடி நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீது பதிலுரை அளித்துப் பேசி வருகிறார்.

சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக பேசி வரும் பிரதமர் மோடி இதுவரை மணிப்பூர் குறித்து ஒரு வார்த்தை கூட பேசவில்லை. பாஜக அரசின் சாதனைகள் குறித்தும் எதிர்க்கட்சிகளை குறிப்பாக காங்கிரஸை விமரிசித்தும் பேசி வருகிறார்.

இதையடுத்து, மணிப்பூர் குறித்து பிரதமர் மோடி பேச வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் ‘மணிப்பூர்.. மணிப்பூர்..’ என தொடர்ந்து முழக்கமிட்டனர்.

இந்நிலையில் பிரதமர் மோடி மணிப்பூர் குறித்து பேச முன்வராததைக் கண்டித்து எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

முன்னதாக, மணிப்பூர் குறித்து பிரதமர் மோடி பேச வேண்டும் என்பதற்காகவே இந்த நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்தோம் என்று எதிர்க்கட்சிகள் கூறியது குறிப்பிடத்தக்கது.

திருவல்லிக்கேணி வழக்கறிஞர் பார்த்தசாரதி மறைவு!

மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை அஞ்சலி!

சென்னை,ஆக.11- கழக மூத்த வழக்கறிஞர் பார்த்தசாரதி நேற்று காலை (10.8.2023) உடல்நிலை சரியில்லாத காரணத்தால் இயற்கை எய்தினார். அன்னாரது இறுதி ஊர்வலம் அவரது இல்லமான எண். 30, ரங்கநாதன் தெரு, சேப்பாக்கம் திருவல்லிக்கேணி, சென்னை முகவரியிலிருந்து புறப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது. செய்தி அறிந்து தி.மு.க சட்டத்துறை தலைவரும் மூத்த வழக்கறிஞருமான. இரா. விடுதலை,சி.அய்யனார் மற்றும் கழக வழக்கறிஞர்கள் தி.மு.க.சட்டத்துறை சார்பாக கலந்து கொண்டு அன்னாரது உடலுக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

‘வாட்ஸ் அப்’ பில் வந்த செய்தி!

தேர்தல் பிரச்சார சபையாக மாறிப் போன பாராளுமன்றம்..!

நாடே எதிர்ப் பார்த்த ஒன்றிய தலைமை அமைச்சர் உரையில்..

பற்றி எரியும் மணிப்பூர் ஹரியானா கலவரங்களுக்கு தீர்வு என்ன??

இதற்கான எந்த பதிலும் இல்லை.!!!

மாறாக.. இந்திய ஒன்றியத்தின் பிரச்சினைகளுக்கு காரணம்..

70 ஆண்டுகளுக்கு முன் ஆட்சி செய்த நேரு.. 60 ஆண்டுகளுக்கு முன் ஆட்சி செய்த இந்திரா..

காரணம் என்று ஒப்பாரி வைத்த பிரதமர்.!!

வேடிக்கையான பதிலுரை..

மணிப்பூரில் 4000 வீடுகள் அழிப்பு..

60000 பேர் அகதிகளாக.. 150 பேர் கொலை.. 300 வழிப்பாட்டுத் தலங்கள் அழிப்பு..

இக் கொடுமைகளுக்கு பதில் கூறாமல்..

காங்கிரஸ் திமுகவை வசை பாடிய பிரதமர்..!!

மணிப்பூர் கலவரத்திற்கு தி.மு.க. காங்கிரஸா காரணம்.???

இப்படி ஓர் பிரதமரை விடுதலை இந்தியா இப்போது தான் காண்கிறது..

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டில்..

ஒரு பிரதமர் பாராளுமன்றத்திற்கு வந்து உரையாற்றுவதற்கே.. எதிர்க் கட்சிகள் போராடும் நிலையில் புதிய இந்தியா.!!!

சென்னை வடகிழக்கு மாவட்டம் சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாநில அளவிலான மாபெரும் கால்பந்து போட்டி பாடியநல்லூர் அங்காள பரமேஸ்வரி கோயில் திடலில் நடைபெற்றது.சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளரும் ஒன்றிய துணை பெருந் தலைவருமான மீ.வே. கர்ணாகரன் தலைமை வகித்தார்.ஒன்றிய செயலாளர் வைதீக மேடு செல்வசேகரன்,ஒன்றிய நிர்வாகிகள் காசிம் முகமது,துரைவேல்,சீனிவாசன்,வீரம்மாள்,அரசுகாரனோடை விஜயன்,புதூர் சேகர்,பொன் கோதண்டன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.போட்டியைசென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் சுதர்சனம் எம்.எல்.ஏ.துவக்கி வைத்து வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுத் தொகை வழங்கினார்.

கோடைகாலத்தில் மின்சார உள்கட்டமைப்பு

சேதத்தால் பாதிக்கப்பட்டுள்ள மாநிலங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும்!

மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஆக. 11- டெல்லியில் கோடைக்கால மாநிலங்களவை கூட்டத் தொடர் நடைபெற்று வருகிறது. அவையில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு, கோடைகாலத்தில் மின்சார உள்கட்டமைப்பு சேதத்தால் பாதிக்கப்பட்டுள்ள மாநிலங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும் என மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி வலியுறுத்தி உள்ளார்.

மாநில டிஸ்காம்கள் பெரும் சவால்களை எதிர்கொள்கின்றன. குறிப்பாக கோடைக்கால தேவை அதிகமாக உள்ள காலத்தில், மின்சார உள்கட்டமைப்புக்கு, குறிப்பாக மின்மாற்றிகள் பெரும் சேதத்தை ஏற்படுத்துகிறது. ஆகையால் உள்கட்டமைப்பு சேதத்தால் பாதிக்கப்பட்டுள்ள மாநிலங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்க அமைச்சகம் பரிசீலிக்கிறதா? அவ்வாறு மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு எவ்வளவு ? என கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி கேள்வி எழுப்பி உள்ளார்.

இதற்கு பதிலளித்து பேசிய மின்சாரம் மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் ஆர்.கே.சிங், அதிக கோடை கால தேவையின் போது, காற்றுச் சீரமைத்தல் மற்றும் குளிரூட்டும் சுமைகளின் அதிகரித்த பயன்பாடு காரணமாக டிஸ்காம்கள் அதிகமாக மின் தேவையைக் காண்கின்றன. டி ஸ் டி பி யூ ஷ ன் டிரான்ஸ்ஃபார்மர்கள் (DT) போன்ற முக்கியமான விநியோக உள்கட்டமைப்புகளான கேபிள்கள் சில நேரங்களில் அதிக சுமைகளை அடைகின்றன மற்றும் அதிக வெப்பத்தால் தோல்வியடைகின்றன, இதனால் மின்

தடைகள் மற்றும் மின்சார உள்கட்டமைப்பிற்கு சேதம் ஏற்படுகிறது. இச்சமயத்தில் பழமையான மின்மாற்றிகள், கேபிள்கள் மற்றும் பிற விநியோக உபகரணங்களில் சேதம் அதிகமாக இருக்கும்.

துல்லியமான தேவை முன்னறிவிப்புகளின் அடிப்படையில் தங்கள் விநியோக உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும் ஒட்டுமொத்த செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துவதற்கும் டிஸ்காம்கள் முதலீடு செய்ய உச்ச சுமை மேலாண்மை தேவைப்படுகிறது.

தீன் தயாள் உபாத்யாயா கிராம் ஜோதி யோஜனா (DDUGJY) போன்ற பல்வேறு திட்டங்களின் கீழ் நிதி ஒதுக்கீடு மூலம் டிஸ்காம்களில் விநியோக உள்கட்டமைப்பை மேம்படுத்துதல் மற்றும் உருவாக்குதல் ஆகியவற்றை இந்திய அரசு எளிதாக்கியுள்ளது.

கிராமப்புற ங்களில் துணை பரிமாற்றம் மற்றும் விநியோக உள்கட்டமைப்புகளான ஒருங்கிணைந்த மின் மேம்பாட்டுத் திட்டம் (IPDS), நகர்ப்புறங்களில் துணைப் பரிமாற்றம் மற்றும் விநியோக வலையமைப்பை வலுப்படுத்துவது மின்சார விநியோகத்தில் முக்கிய நடவடிக்கையாக எடுத்துக் கொள்ளப்பட்டது. நாட்டின் விநியோக முறையை வலுப்படுத்த ஒட்டு மொத்தமாக ரூ.1.85 லட்சம் கோடி செலவிடப்பட்டது. மாநில வாரியாக விவ ரங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

சமீபத்தில், இந்திய அரசு, நிதி ரீதியாக நிலையான மற்றும் செயல்பாட்டுத் திறனுள்ள விநியோகத் துறையின் மூலம் நுகர்வோருக்கு மின்சார விநியோ கத்தின் தரம் மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்தும் நோக்கத்துடன் புதுப்பிக்கப்பட்ட விநியோகத் துறை திட்டத்தை (RDSS) தொடங்கியுள்ளது. இத்திட்டம் ரூ. 3,03,758 கோடி மற்றும் மொத்த பட்ஜெட் ஆதரவு கடந்த 2021 - 22 முதல் 2025 - 26 நிதியாண்டு வரையிலான ஐந்து ஆண்டுகளில் இந்திய அரசிடமிருந்து ரூ. 97,631 கோடி மதிப்பில் நெட்வொர்க் வலுப்படுத்துதல் மற்றும் கணினி ஆட்டோமேஷன் உள்ளிட்ட விநியோக வலையமைப்பை மேம்படுத்தவும், முதலீடு கள் மூலம் விநியோகத் துறையில் தொழில்நுட்ப மற்றும் வணிக இழப்புகளை மேம்படுத்தவும் இந்தத் திட்டம் கவனம் செலுத்துகிறது. டிஸ்டிபியூஷன்டிரான்ஸ்ஃபார்மர்கள் (DT) பெருக்குதல், புதிய துணை மின்நிலையங்களை உருவாக்குதல், துணை மின்நிலையங்களை மேம்படுத்துதல், HVDS, வேளாண்மை ஊட்டப் பிரிப்பு, ரிங் மெயின்கள் வழங்கல் அமைப்புகள் (RMUs), மின்கடத்திகளை மேம்படுத்துதல், கேபிளிங் பணிகள் போன்றவை மாநில டிஸ்காம்களில் விநியோக உள்கட்டமைப்புப் பணிகளுக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்றார்.

புதுப்பிக்கப்பட்ட விநியோகத் துறை திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் இத்திட்டத்திற்கு ஆகும் செலவு ரூ. 5875 கோடி. அதில் அரசு அனுமதித்துள்ள தொகை ரூ. 2758 கோடி, ஆனால் ஒன்றிய அரசு ரூ. 3070 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது அதே போல் தமிழ்நாடு ஸ்மார்ட் மீட்டர் திட்ட த்திற்கு ஆகும் தொகை ரூ. 19,235.36 கோடி. அதில் அரசு அனுமதிக்கப்பட்ட செலவு உள்கட்டமைப்பு பணிகள் ரூ. 9,066.27 கோடி. ஸ்மார்ட்டுக்கான பட்ஜெட் ஆதரவு அளவீட்டு பணிகளுக்கு ரூ. 3,398.45 கோடி, பட்ஜெட் ஆதரவு உள்கட்டமைப்பு பணிகள் ரூ. 5,439.76 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

இவ்வாறு அவர் பேசினார்.

தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு

மாநில நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்!

திராவிட முன்னேற்ற கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நாளை (12.08.2023, சனிக்கிழமை) பிற்பகல் 4.00 மணியளவில் அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளதால் கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: நூற்றாண்டு நாயகர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாட்டம் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் அறிமுக கூட்டம் தொடர்பாக.

டாக்டர். அ. சுபேர்கான்
செயலாளர்
தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு

முத்தமிழ் அறிஞர் கலைஞரின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாளை யொட்டி மீஞ்சூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் வல்லூர் எம். எஸ். கே. ரமேஷ் ராஜ் ஏற்பாட்டில் கலைஞரின் திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். பின்பு 2000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் மதிய அறுசுவை உணவு வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் பொன்னேரி தொகுதியின் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர் மாவட்ட அவைத் தலைவர் பகலவன், மாநில தகவல் தொழில்நுட்ப துணை செயலாளர் சி.எச். சேகர், மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், மாவட்ட துணை செயலாளர்கள் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, மு.கதிரவன், பொதுக்குழு உறுப்பினர் கே.எஸ்.மணி, முன்னாள் மாவட்ட பொறுப்புக் குழு உறுப்பினர் கோதண்டம், அத்திப்பட்டு ஊராட்சி மன்ற துணைத் தலைவர் எம்.டி.ஜி.கதிர்வேல் மற்றும் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கிளை கழக நிர்வாகிகள் அணியின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மாலைமணி பி.எஸ்.இளங்கோ
34-வது ஆண்டு நினைவு நாள்
11.8.1989

எங்கள் இதயத்தை விட்டு நீங்காது
என்றென்றும் எங்களது நினைவில் வாழ்ந்து வரும்
இதய தெய்வத்திற்கு அஞ்சலி!

மகன்: சித்தார்த் இளங்கோ
மனைவி. சகுந்தலா இளங்கோ
மகள்கள்: திருமதி. தமிழ்ச்செல்வி
திருமதி. மணிமேகலை
திருமதி. எழில் திரு. பழனியப்பா
மருமகன்கள்: திரு. பாண்டியன்
திரு. சுதாகர்
மருமகள்: தாட்சாயினி சித்தார்த்
பேரன்கள்: வருண்ராஜ், ஷருண்ராஜ், முகில், தர்ஷன், மௌரியன்
மற்றும் அலுவலக நண்பர்கள்